இ - ள். அங்ஙனமானவர், இடைவருந்துமென்று கலங்கள் அரற்று கிற்கவும் ஒதுங்கியும் தாங்கியும் கீதத்தைவிரும்பிச் செவிப்புலனுற்கேட்டற்கு ஓடினார்; அப்பொழுது அவனும் கட்புலனுகாமையாலும் பாட்டினாலும் காம னேயாயினனென்க.

கேள்வியுமுணரப்படுதலிற் காட்சியேயாம். நாடினரும் பாடம். (சங)

2038. தாமமாலைவார்குழற்றடங்கணார்க்கிடங்கழி
காமனன்னகாளைதன்கருத்தொடொத்ததாகலான்
மாமலர்த்தெரியலான்மணிமிடற்றிடைக்கிடந்த
சாமகீதமற்றுமொன்றுசாமிநன்குபாடினான்.

இ - ள். மகளிர்க்கு நம்வயத்தனுகானென்று தம்மிடத்தினின்று நீக்க ப்படுவானாகிய காமனையொத்தகாளை, தன்னினைவோடு அவர்கருத்துமொத்த தாதலிற் கொன்றைமாலையையுடைய இறைவனது நீலமணிபோலு மிடற் றிடத்தேகிடந்ததொரு சாமகீதத்தைச்சாமி பின்னும் நன்றாகப் பாடினா னென்க.

தெரியலானைச் சீவகனெனின், பின்னர்ச் சாமியென்னும்பெயர்வேண் டாவாம். (சச)

2039. கள்ளமூப்பினந்தணன்கனிந்தகீதவீதியே
வள்ளிவென்றநுண்ணிடைமழைமலர்த்தடங்கணார்
புள்ளுவம்மதிமகன்புணர்த்தவோசைமேற்புகன்
றுள்ளம்வைத்தமாமயிற்குழாத்தினோடியெய்தினார்.

இ - ள். வேடனாகியமகன் மதியாற்புணர்க்கப்பட்ட தம்மோசையாக அழைக்கின்ற ஓசைமேலே விரும்பி மனம்வைத்த மயிற்றிரள் ஓடுமாறு போலே, தடங்கண்ணாரெல்லாம் அந்தணனது முற்றுப்பெற்ற கீதத்தின் வழியே ஓடிச் சேர்ந்தாரென்க.

வள்ளி - வல்லி. புள்ளுவமகன் - புள்ளினோசையைத் தன்னிடத்தே யுடையமகன். (சரு)

வேறு.

2040. இனிச்சிறிதெழுந்துவீங்கியிட்டிடைகோறுநாங்க
ளெனக்கொறுகொறுப்பபோலுமிளமுலைப்பரவையல்குற்
கனிப்பொறைமலிந்தகாமர்கற்பகமணிக்கொம்பொப்பாள்
பனிப்பிறைப்பூணினான்றன்பாண்வலைச்சென்றுபட்டாள்.

கொறுகொறுத்தல், குறிப்புச்சொல்லாகிய இரட்டைக்கிளவி.

இ - ள். நாங்கள் மேல் இந்நிலையிற்சிறிதெழுந்துவீங்கி இடையைக் கொல்வேமென்று கோபிப்பனபோலு முலையினையும் அல்குலையுமுடைய தெருகு பழமாகிய பாரமிக்க கற்பகக்கொம்பொப்பாள், பூணினனது பாட்டா 'இயவலையிலே சென்றகப்பட்டாளென்க. (சசு)